**தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை - 2019**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது. அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கல்லூரிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது

நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபை ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகாரசபையின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவுசெய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்ளுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அதுதொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு ‘‘முறையாக திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக்கொள்வது அவசியமாகவுள்ளது.

**1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் அல்லது காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் காட்டப்பட வேண்டிய வருடத்திற்குரிய வட்டி வருமானமானது ரூபா 159,732,734 மற்றும் இலாபம் ரூபா 130,697 க்கு பதிலாக வருடத்திற்குரிய வட்டி வருமானமான ரூபா 160,360,015 மற்றும் இலாப வருமானமாக ரூபா 689,697 காட்டப்படடிருந்தது. | விபரமான வருமானக்கூற்றில் காட்டப்பட்டுள்ள வட்டி வருமானம் ரூபா 160,360,015 வட்டி வருமானம் பெறப்பட வேண்டியதாகவும் இலாப வருமானம் ரூபா 689,697 இலாப வருமானமாகவும் காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் காசாக உள்ள வட்டியின் அளவையும் மற்றும் இலாபத்தின் அளவையும் மாத்திரம் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | காசுப்பாய்ச்சல் கூற்றைத் தயாரிக்கும் போது நியமங்களின் பிரமாணங்களுக்க மைவாக இருத்தல் வேண்டும். |
| (ஆ) | அதிகாரசபையினால் இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் பிரகாரம் நடைமுறையல்லா சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. கிரயம் ரூபா 108,582,091 ஆன முழுமையாக தேய்மானமிடப்பட்ட 26 வாகனங்கள் தொடர்ந்தும் உபயோகிக்கப்பட்டு வருகின்றன. அதன்படி இலங்கை கணக்கீட்டு நியமம் இல. 8 இன்படி திருத்தம் செய்து சாதாரண பெறுமதியானது நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டு நியமம் இல. 16 இன் 29 ஆம் பிரிவின் பிரகாரம் சொத்தின் கிரயத்தினைக் கணக்குகளில் காட்டுவது நிறுவனத்தின் கொள்கையாகும். எனினும் 2017 கணக்காய்வின் போது சுட்டிக்காட்டப்பட்டதன் படி வாகனங்களுக்கான மீள் பெறுமதியிடல் 2017 இல் தொடங்கப்பட்ட போதும் 2019 ஆம் ஆண்டின் இறுதியில் ஒரு வாகனத்தின் பெறுமதியிடல் பெறுமதியிடல் திணைக்களத் திடமிருந்து ஆண்டிறுதியின் போது பெறப்பட்டிருக்கவில்லை. இது சம்பந்தமாகவும் கணக்கீட்டு நிரல் (3) இல் காட்டப்பட்டிருந்தது. 2020 ஆம் வருடம் முடிவடைவதற்கு முன்னர் அனைத்து வாகனங்களையும் மீள் பெறுமதியிடல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | நியமங்களின் பிரமாணங்களுக்கு இணங்கி இருத்தல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகாரசபையின் கணக்கீட்டுக் கொள்கையின்படி ஒவ்வொரு காலப்பகுதியிலும் ஆதனம், பொறித்தொகுதி, உபகரணங்கள் மற்றும் கட்புலனாகா சொத்துக்கள் முன்கொண்டு செல்ல வேண்டிய பெறுமதியை மீளாய்வு செய்து கணக்குகளில் சீராக்கம் மேற்கொள்ளப்படுவதாக காட்டப்பட்டிருந்த போதும் அவ்வாறு மீளாய்வு செய்யாது ஆதனம், பொறித்தொகுதி, உபகரணம், பெற வேண்டிய மீதிகள், வைப்புக்கள், முற்பணங்கள் மற்றும் வேறு சொத்துக்கள் என்பன பொருட்டு சேதமாக்கும் நட்டங்களாக மொத்தம் ரூபா 5,976,657 இற்கான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | 2019 ஆம் வருடத்தின் போது கட்புலனாகாச் சொத்துக்கள், ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் மீதான சேதமாக்கும் நட்டங்கள் தொடர்பான தகவல்கள் அறிக்கையிடப்படாமையால் அந்த நிலுவைகள் கணக்குகளில் காட்டப்பட்டிருந்தன. | கணக்கீட்டு நியமங்களின் பிரமாணங்களுக்கு இணங்கி நடத்தல் வேண்டும். |

### 1.5.4 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இரத்தினக்கல் காணிகள் ஏலவிற்பனையின் போது காணி உரிமையாளர்கள் பிரிவினருக்கு செலுத்தப்பட வேண்டிய இலாபத்தின் 40 சதவீதப் பகுதி செலுத்துதல் சம்பந்தமாக காணி உரிமையாளர் பிரிவினருக்கிடையில் காணப்படுகின்ற வழக்கொன்றின் காரணமாக உரிய இலாபப் பகுதி அமைச்சரவையின் அனுமதியுடன் அதிகார சபையின் அனுமதியுடன் அதிகாரசபையினால் 2016 மற்றும் 2017 வருடங்களிலே ரூபா 120,713,647 பொதுத் திறைசேரியில் தற்காலிகமாக மேலதிக நிதியக் கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளது. இந்த | 2016 மற்றும் 2017 ஆம் வருடங்களில் இடம்பெற்ற பகவன்தலாவ இரத்தினக்கல் காணிகள் ஏலவிற்பனை வருமானத்தில் பொது திறைசேரியினால் நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. அந்த நிதி திரட்டிய நிதியத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அரச வியாபார திணைக்களத்தினால் வழங்கப்படட எழுத்துமூலமான அறிவுறுத்தலுக்கு அமைவாகும். கணக்காய்வில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் எதிர்காலத்தில் வைப்பாக கணக்கிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாகக் கணக்கிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிதி வைப்பாக காட்டப்படுவதற்கு பதிலாக உரிய வருடங்களின் செலவாக கணக்கிடப்பட்டிருந்தது. மேலும் நிதியத்தின் முகாமையாளரினால் பணிப்பாளருக்கு (நிதி) 2020 யூன் 22 ஆம் திகதிய கடிதத்தினால் தெரிவிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | அதிகாரசபையின் 25 வாகனங்கள் 2017 மற்றும் 2018 ஆம் வருடங்களில் மீள் பெறுமதியிடலை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தபோதும் ஒரு வாகனம் மீள் பெறுமதியிடாததன் காரணமாக வேலைகள் பூரணப்படுத்தப்பட்டு பெறுமதிகளை கணக்கிடுவதற்கு மீளாய்வாண்டிலே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2017 மே 15 ஆம் திகதி அதிகாரசபைக்கு உரித்தான 27 மோட்டார் வாகனங்களை மதிப்பீடு செய்வதற்கு மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் 26 வாகனங்ள் மதிப்பிடப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் ஒரு வாகனத்திற்காக மதிப்பீட்டு அறிக்கை இதுவரை கொடுக்கப்பட்டிருக்கவில்லை. எதிர்காலத்தில் தனியார் பிரிவில் விலை மனுக்கோரப்பட்டு வாகன மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக்கொள்வதற்கு இயலுமை உள்ளது. | மதிப்பீட்டு திணைக்களத்தினால் மதிப்பீடு செய்து மீள் பெறுமதியிடலின் பெறுமதி கணக்கிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.5 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகாரசபையினால் உலக வியாபார மத்திய ஸ்தானத்தை வாடகைக்கு பெற்று சிறிய மற்றும் மத்திய அளவு வியாபாரிகளுக்கு வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த வியாபார அறைகளுக்காக பெறவேண்டியிருந்த வாடகை வருமானம் மீளாய்வாண்டிலே நிலுவையாக இருந்த ரூபா 4,476,521 ஐ அறவிட முடியாத மீதியாக கருதி பணிப்பாளர் குழுவின் அனுமதியின்றி பதிவழிக்கப்பட்டிருந்தது. | அதிகாரசபைக்கு கிடைக்க வேண்டி இருப்பினும் 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் அறவிட முடியாமைக்கான அதிக வாய்ப்புள்ள மீதிகளை அறவிடுவதற்கு இன்றைய வரைக்கும் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு முனையப்பட்டுள்ளது. அத்தோடு வைப்புத் தொகையை விட அதிகரித்துள்ள கிடைக்க வேண்டிய மீதிகளுக்காக ஐயக்கடன் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | உரிய அனுமதியை பெற்றுக்கொள்வதற்கு மற்றும் கிடைக்க வேண்டிய வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | அதிகாரசபையினால் சட்டத்தினால் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் | இரத்தினக்கல் காணிகள் ஏல விற்பனையின் போது அரசிடம் காணப்படும் | வழிகாட்டல்கள் உரிய அனுமதியைப் பெற்றுக்கொள்ள |

| | | |
|---|---|---|
| இரத்தினக்கல் காணிகள் இரத்தினக்கற்கள், இல்லங்கள் என்பவற்றின் ஏலவிற்பனையின் போது கொள்வனவு வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளாமல் அதற்காக வேறு வழிகாட்டலொன்றை தயாரித்து அதற்கு நிதியமைச்சின் அனுமதியை பெற்றிருக்கவில்லை. | இரத்தினக்கற்கள் அரிக்கும் உரிமையை இரண்டாம் பகுதியினருக்கு வரையறுத்த காலத்திற்கு வழங்குதல் இடம்பெறுகிறது அபிவிருத்தி செயற்திட்டங்களின் போது கண்டெடுக்கப்படுகின்ற இரத்தினக்கற்கள் இல்லங்கள் அந்த அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படாதவாறு அரசுக்கு அதிக பட்ச வருமானம் கிடைக்கக்கூடிவாறு விசேட முறைமையொன்றை பயன்படுத்தி ஏலவிற்பனை செய்யப்படுகிறது. இந்த வேலையின் முக்கியத்தன்மையை கருத்திற் கொண்டு முக்கியமான வழிகாட்டல்கள் தயாரிக்கப்பட்டு ஏல விற்பனை இடம்பெறுகிறது. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.6 கிடைக்க வேண்டிய பணம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இயந்திர மாணிக்கக்கற்கள் சுரங்க அகழக்வு அனுமதிப்பத்திரம் வருடாந்தம் நீடிக்கப்படும் போது இரண்டு அகழ்வாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய சேவைக் கட்டணங்களின் மொத்தம் ரூபா 195,000 மற்றும் 14 சுரங்கப்பணியாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மாதாந்த சுரங்க மேற்பார்வைக் கட்டணங்களின் மொத்தம் ரூபா 1,600,000 அறவிடப்பட்டிருக்கவில்லை. | இயந்திர சுரங்கத்திற்காக கொழும்பு மற்றும் மொனராகலை பிரதேச அலுவலகத்தினால் குறைவாக அறவிடப்பட்ட பணத்தை மீண்டும் அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இரத்தினபுரி மற்றும் எஹலியாகொடை பிரதேசங்களில் மே, ஜுன் மாதங்களில் வெள்ளம் மற்றும் அதிக மழை காரணமாக சுரங்க அகழ்வு இடம்பெறாமை, ஒரு சில சுரங்கங்கள் தற்காலிகமாக அகழ்வுகள் நிறுத்தப்பட்டுள்ளமை, இயந்திர சுரங்க அனுமதி நிறைவடைந்த பின்னர் மீண்டும் புதுப்பித்துக் கொள்வதற்கு குறிப்பிட்ட காலம் தேவைப்படுகின்றமை ஆகிய காரணங்களினால் காலத்திற்கு மாதாந்த சுரங்கக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | உரிய கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2018 ஆம் வருடத்தின் நடாத்தப்பட்டிருந்த கண்காட்சிக்கு உரிய ரூபா 500,000 செலவு இன்னும் வைப்பாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டுள்ளது. | 2018 ஆம் வருடத்தின் Facet Sri Lanka கண்காட்சிக்காக பண்டாரநாயக்க மாநாட்டு நிலையத்திற்கு இந்த கொடுப்பனவை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் கண்காட்சியின் கிரயத்திற்கான வைப்புத்தொகையை விஞ்சியுள்ளதன் காரணமாக இந்த ரூபா 500,000 தொகையை பெற முடியாதுள்ளது. | சரியாக கணக்குகளில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1993 இன் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபைச்சட்டம் 15(2) ஆம் பிரிவு | இரத்தினக்கல் பரீட்சித்தல் மற்றும் சான்றிதழ் வழங்குதல் என்பவற்றுக்காக இயங்கிவரும் தனிப்பட்ட ஆய்வுகூட நிலையங்களை பதிவு செய்வதற்கும் மற்றும் ஒழுங்கமைப்பதற்குமான நடைமுறைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இலக்கம் NGJA/பொது கடிதம் மற்றும் 2019 மார்ச் 19 ஆம் திகதிய கடிதத்தின் ஊடாக தேவையான சட்ட ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. | சட்டத்தின் பிரமாணங்களுடன் இணங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 13(8) ஆம் பிரிவு | நிதிச்சட்டத்தின் 13(7)(ஐ) ஆம் பிரிவின் பிரகாரம் முன்னைய வருடத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கு விடை அளிக்கப்பட்டிருக்கவில்லை. | அறிக்கை சம்பந்தமாக கணக்காய்வு முகாமைத்துவக்குழு கலந்துரையாடி பணிப்பாளர் சபையின் தீர்மானங்களுடன் மறுமொழி மீளாய்வு செய்யப்பட்டுள்ளது. | நிதி சட்டத்தின் விதிமுறைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 142(2) | 2018 மற்றும் 2019 பெப்ரவரி வரையான காலத்திற்குள் தங்கத்தின் அளவை தீர்மானிக்கும் பிரிவினால் | இப்போது வரை இந்த பணம் முழுமையாக அறவிடப்பட்டுள்ளது. இதற்குப் பிறகு சேவைக் | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ரூபா 1,508,707 ஆன சேவை கட்டணம் தீர்வையாகவதற்கு முன்னர் சேவை விநியோகிக்கப்பட்டிருந்தது. | கட்டணம் அறவிட்டதன் பின்னர் மாத்திரம் சேவை விநியோகம் இடம்பெறும். | |
| (ii) | நிதிப்பிரமாணம் 396 | 10 வருடங்களுக்கு முன்னர் பெறப்பட்டு மறுக்கப்பட்டிருந்த ரூபா 178,000 ஆன 02 காசோலைகள் சம்பந்தமாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காசோலைகள் மறுக்கப்படுதல் சம்பந்தமாக பிராந்திய அபிவிருத்தி (கொழும்பு) ஏற்றுமதி ஊக்குவிப்பு பிரிவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2015 ஜுலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை ஊடாக திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 371 | உத்தியோகத்தரொருவருக்கு 11 சந்தர்ப்பங்களில் ரூபா 100,000 மேலதிகமாக முற்பணம் வழங்குதல் 15 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 280,000 முற்பணம் 15 நாடகள் தொடக்கம் 40 நாட்கள் வரை தாமதித்து செலுத்தியிருத்தல் அவசியமான தேவையை ஆராயாமல் முற்பணம் வழங்கப்பட்டதால் 11 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டுள்ள ரூபா 101,900 ஆன முழு முற்பணத்தொகை மற்றும் 28 சந்தர்ப்பஙகளில் வழங்கப்பட்டுள்ள ரூபா 435,700 ஆன முழு முற்பணத்தொகையில் நூற்றுக்கு 50 இலும் கூடியதை மீள் செலுத்தப்பட்டிருந்தது. | பணிப்பாளர் சபையின் அங்கத்தவர்கள் எண்ணிக்கை 11 ஆக இருப்பதனால் பணிப்பாளர் சபையின் கூட்டத்திற்காக வழங்கப்பட வேண்டிய முற்பணத் தொகை ரூபா 100,000 வரையறையை விஞ்சுவதை தவிர்க்க முடியாது. பொருட்கள் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளும் போது ஏற்படுகின்ற பிரச்சினைகளின் அடிப்படையில் 03 நாட்கள் காலத்திற்குள் இந்த முயற்பணங்கள் செலுத்தப்பட்டிருக்கவில்லை. பெற்றுக்கொடுக்கப்படுகின்ற முற்பணங்களை அவசரமாக செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளன. முழு முற்பணத்தொகையை மீண்டும் செலுத்துவதற்கு காரணத்தை குறிப்பிடுமாறு கூறி அந்த பிரிவுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிறுவனக் கோவையின் 11 ஆவது பந்தியின் 13.4 ஆம் பிரிவு | பதவிக்கு உரிய தகைமைகளை கொண்டிராத உத்தியோகத்தரொருவரை பணிப்பாளர் நாயகம் பதவிக்கு சேவை பார்ப்பதற்காக நியமிக்கப்பட்டிருந்தது. | 1993 ஆம் வருட 50 ஆம் இலக்கமுடைய தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை சட்டத்தின் 23 ஆவது பிரிவின் கீழ் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் எழுத்துமூல கட்டளைக்கு உரிய பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு வேலை பார்ப்பதற்கு அந்த உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டுள்ளார். | நிறுவனக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஊ) | 2003 யூன் 02 ஆம் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை 6.5.3 ஆம் பந்தி | 2017 மற்றும் 2018 ஆம் வருடங்களுக்கான வருடாந்த அறிக்கைகள் கணக்காய்வுத் திகதியான 2019 மே 15 ஆம் திகதியின் போது பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2017 மற்றும் 2018 ஆம் வருடங்களுக்கு உரிய வருடாந்த அறிக்கைகள் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்கு நிரல் அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | 2013 நவம்பர் 01 ஆந் திகதிய DMS/POL.cy/03 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் | 32 பதவிகளுக்கான புதிய ஆட்சேர்ப்புத் திட்ட நடைமுறைகள் மறுசீரமைக்கப்பட்டு அனுமதிக்கப்படவில்லை. | அதிகாரச சபைக்கான அனுமதிக்கப்பட்ட அனைத்து பதவிகளுக்கும் உரிய ஆட்சேர்ப்பு வரைபு படுத்தப்பட்டு 2020 மார்ச் 04 ஆம் திகதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | அறிவுரைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 162,435,579 தொகையான இலாபம் ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 121,557,720 ஆகும். அதன்படி நிதி விளைவுகளில் ரூபா 40,877,859 ஆன மிகையொன்று அவதானிக்கப்பட்டது. இந்த மிகைக்கு பரீட்சித்தலுக்கான அறவீடு ரூபா 22,171,192 இனாலும் வட்டி வருமானம் ரூபா 32,015,292 இனாலும் பெகோ சேவைக்காக அறவீடு ரூபா 12,228,750 இனாலும் மற்றும் இரத்தினக்கல் அரித்தல் வருமானம் ரூபா 5,578,800 இனாலும் அதிகரித்தலும் வெளிநாட்டு கண்காட்சி செலவுகள் ரூபா 9,903,197 இனால் குறைந்ததும் பிரதான தாக்கமளித்திருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகாரசபையினால் ஏல விற்பனை செய்யப்பட்ட பகவன்தலாவை செபல்ட்டன் தோட்ட இரத்தினக்கல் காணியில் 14 துண்டுகளாக காணப்பட்ட சுரங்கங்கள் இரத்தினக்கல் காணி உரிமையாளர்களினால் மூடப்படாமலிருந்ததுடன் அதற்காக காணி உரிமையாளர்களிடமிருந்து பெறப்பட்ட பிணைத்தொகை அரசு உடமையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுரங்கக்குழிகளுக்குள் மேலும் இரத்தினக்கல் இல்லங்கள் காணப்படுவதாலும் மற்றும் அந்த செயற்திட்டம் இதற்குப் பிறகும் நடாத்தப்படுவதற்கு திட்டம் தீட்டப்பட்டிருப்பதாலும் அந்த குழிகள் மூடப்படாமல் உள்ளது. இருப்பினும் தோட்ட கம்பனியின் காணியின் பகுதியை விடுவிப்பதற்கு மறுத்ததன் காரணமாக சுரங்க குழிகளை மூடுவதற்கு தேவையான ஆரம்ப நடவடிக்கை எற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | சுரங்க குழிகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இலங்கைக்கு தங்கம் இறக்குமதி செய்தல் சம்பந்தமாக போதுமான அளவு மேற்பார்வை அல்லது வசதிகளுடனான திட்டமொன்றை அதிகாரச சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 1993 ஆம் வருட 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரச் சட்டத்தில் தங்கம் இறக்குமதி தொடர்பான நிதி ஏற்பாடுகள் காணப்படவில்லை. ஆபரண தொழிலாளர்களுக்கு வசதிகளை ஏற்படுத்துவதற்கு மானிய வரியின் கீழ் தங்கம் இறக்குமதி செய்வதற்காக வசதிகளை ஏற்படுத்துவதற்கு 2018 ஆம் வருடத்திலே விதிக்கப்பட்ட 15% சுங்க வரி சம்பந்தமாக அதிகாரசபையின் தலையீட்டில் மற்றும் மேற்பார்வையில் மத்திய வங்கி மற்றும் திறைசேரியுடன் கலந்துரையாடல் இடம்பெற்றது. | தங்க இறக்குமதி மேற்பார்வைக்கும் மற்றும் வசதிகளை ஏற்படுத்தி கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | 1993 ஆம் வருட 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணச் சட்டம் 1993 ஆம் வருடத்தில் அனுமதி பெறப்பட்டதன் பின்னர் அது காலத்திற்கேற்ற சீர் திருத்தங்களை மேற்கொள்வதற்கு மீளாய்வாண்டிலே நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | 1993 ஆம் வருட 50 ஆம் இலக்க தேுசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை சட்டம் சீர்திருத்தம் மேற்கொள்ளல் சம்பந்தமாக 2019 செப்தெம்பர் 24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை சீர்திருத்தங்களுக்குரிய தீர்மானங்களின் பிரகாரம் புதிய அமைச்சரவையின் அனுமதியை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியுள்ளது. அமைச்சரவை தீர்மானங்கள் சம்பந்தமாக அதிகாரச சபையின் மேல்மட்ட முகாமைத்துவத்தின் கருத்துரைகளை இதுவரை பெற்றுக்கொள்வதற்கு முடியாதுள்ளது. அதற்காக எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்பதை தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். | அதிகாரச சபையின் சட்டம் காலத்திற்கேற்ப சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | அதிகாரசபையின் நீதிப்பிரிவில் 5 வழங்கறிஞர்கள் சேவையாற்றிக் கொண்டிருப்பதுடன் பல்வேறு பகுதியினராலும் அதிகாரசபைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள 30 வழக்குகளில் 26 வழக்குகளுக்காக நீதிபதி திணைக்களத்தின் சேவையை பெற்றுக்கொள்வதற்காக ரூபா 859,114 செலுத்தப்பட்டிருந்தது. | அதிகாரசபையின் நீதிப் பிரிவில் உத்தியோகத்தர்களின் கடமையின் அவசியத்தன்மையை பொருட்டு இரத்தினபுரி பிரதேச அலுவலகத்திற்கு மற்றும் பிரதான அலுவலகத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளது. இரத்தினக்கல் அகழ்தல் அனுமதிப்பத்திர சுற்றிவளைத்தல் சம்பந்தமாக சட்ட நடவடிக்கைகள் மற்றும் ஏனைய சட்ட நடவடிக்கைகள் அதிகமாகவுள்ளதால் நீதிபதி | சட்ட நடவடிக்கைகளுக்காக அதிகாரசபையின் நீதி உத்தியோகத்தர்களின் உதவியை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | திணைக்களத்தின் உதவியை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. | |
| (உ) | இரத்தினக்கல் அகழ்வு அனுமதிப்பத்திரத்தின் நிபந்தனைகளை மீறியதன் காரணமாக சுற்றுநிருபத்தின் பிரகாரம் தீர்மானிக்கப்பட்டிருந்த இணைக்கக்கட்டணம் 6 சந்தர்ப்பங்களில் ரூபா 647,500 குறைவாக அறவிடப்பட்டிருந்தது. அப்போது அதிகாரசபையில் இடம்பெற்ற ரஜத ஜயந்தி நிகழ்வுக்காக சட்டத்திற்குட்படாத வகையில் அனுசரணை பெற்றுக்கொண்டதன் காரணமாக ஒரு அனுமதிப்பத்திரதாரியின் இணைக்கக் கட்டணத்தில் நூற்றுக்கு 25 மாத்திரம் அறவிடுவதற்கு தலைவர் கட்டளையிட்டிருந்ததுடன் அதனால் அறவிடப்படாத இணைக்கக் கட்டணம் ரூபா 250,000 ஆகும். | 1993 ஆம் வருட 50 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தின் 52 ஆம் பிரிவின் பிரகாரம் தவறொன்று இடம்பெறுதல் தொடர்பாக சந்தர்ப்ப சூழ்நிலையை கருத்திற் கொண்டு கட்சியினரின் விருப்பத்தின் படி அந்த தவறு சம்பந்தமாக நியமிக்கமுடியுமான அதிகபட்ச தண்டனையின் மூன்றில் ஒரு பங்குக்கு மேற்படாத அளவில் ஏற்படுத்த முடியும். சட்டத்தின் படி தவறுக்காக ரூபா 1,000,000 க்கு மேற்படாத தண்டனைக்கு கட்டுப்படுகின்றது. இதன்படி இணைக்கப்படாட்டின் போது அறவிட முடியுமான அதிகபட்ச இணைக்கத் தொகை ரூபா 333,333 ஆகும். அதிகாரசபை தற்போது இணைக்கத் தொகைக்காக பாவனைக்குட்படுத்துகின்ற 121-7 இலக்க சுற்றுநிருபத்தில் தவறுகள் சுட்டிக்காட்டப்பட்டு அதற்காக ரூபா 333,333 ஆன அதிகபட்ச இணைக்கத்தொகையொன்று நியமிக்கப்பட்டுள்ளது. | சுற்றுநிருபத்தின் பிரகாரம் இணைக்கத்தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | | நிபந்தனைகள் மீறப்பட்டு இணைக்க மேற்படுவதற்கு முன்னர் உரிய கட்சியினரின் நடைமுறை வசதியீனங்களை அதிகாரசபை கவனத்தில் கொள்ள வேண்டும். இதன் போது இணைக்கத்தொகைக்காக உரிய அடுத்த கட்சியினர் தலைவர் மற்றும் அதிகாரசபையின் பிரதான நிர்வாக உத்தியோகத்தருக்கு முறையிடுகள் சமர்ப்பிக்கப்படுகின்றது. அதன் போது ஏனைய சந்தர்ப்ப சூழ்நிலைகள், மற்றும் நடைமுறை தொழில்நுட்ப நிலைமைகளை மீள்பரிசீலனை செய்த பின்னர் அதிகாரசபையின் பிரதான நிர்வாக உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகார சக்தியின் அடிப்படையில் இணைக்கத்தொகை சீர்திருத்தப்படுகின்றது. | |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகாரசபையினால் உலக வியாபார மத்திய நிலையத்தில் வாடகை அடிப்படையில் பெறப்பட்ட 6,995 சதுர அடி நிலப்பரப்பில் 35 விற்பனைக் கூடங்கள் நிறுவப்பட்டு சிறிய மற்றும் மத்திய அளவு வியாபாரிகளுக்கு வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதுடன் மீளாய்வாண்டிலே ரூபா 2,748,862 மற்றும் முன்னைய வருடத்திலே ரூபா 3,232,365 நட்டம் ஏற்பட்டிருந்தது. | உலக வியாபார மத்திய நிலையத்தின் 41 கடைகளில் தற்போது 18 கடைகள் மாத்திரம் செயற்படுகின்ற நிலையில் காணப்படுவதுடன் மாதாந்த வாடகை மற்றும் மின்சாரக் கட்டணம் செலுத்தப்படாததன் பொருட்டு 02 கடைகள் அதிகாரசபையினால் முத்திரையிடப்பட்டுள்ளது. வெற்றிடமாக காணப்படுகின்ற கடைகளின் கடை வாடகைகள் செலுத்தப்படாமல் சட்ட விரோதமாக நீண்டகாலமாக தங்கியிருக்கின்ற வாடகையாளர்களினால் அதிகாரசபைக்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை இழிவாக்கும் நோக்கத்தினால் அதிகாரசபை சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரண பரிமாற்ற மத்திய நிலையத்தின் 05 ஆவது மாடி 2020 ஜுலை மாதம் 01 ஆம் திகதியிலிருந்து உரிமை நிறுவனத்திற்கு கையளிப்பதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது. | நட்டத்தை ஈடுசெய்து கொள்வதற்கும் மற்றும் நிலுவை வாடகையை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | அதிகாரசபையின் வேலைகள் சம்பந்தமாக மக்களுக்கு தெரியப்படுத்துவதற்காக கொழும்பு கோட்டை நகர மண்டபம் கட்டுநாயக்க, காலி மற்றும் கண்டி ஆகிய இடங்களில் ரூபா 21,462,000 செலவிட்டு Digital பதாதைகள் நிர்மானித்தல் மற்றும் அதில் வியாபார விளம்பரங்கள் காட்சிப்படுத்தல் ஊடாக மாதாந்தம் ரூபா 4,000,000 வருமானத்தை ஈட்டும் நோக்கத்தைக் கொண்ட செயற்திட்டத்திற்காக பணிப்பாளர் சபையின் அனுமதி பெறப்பட்டிருந்தது. அனுமதிக்கப்படட பிரதேசமல்லாத இரத்தினபுரி நகரத்திலே ரூபா 4,061,400 செலவில் Digital பதாதையொன்று நிர்மாணிப்பதற்காக ஒப்பந்தகாரருக்கு ஒப்படைக்கப்பட்டு அதற்காக முற்பண காப்புறுதி ஒன்று | "LED Digital" பதாதை பொருத்துவதற்காக தேசிய போட்டி விலை மனுக்கோரலின் கீழ் வெளிப்படையான பத்திரிகை விளம்பரத்தின் ஊடாக விலை மனுக்கோரப்பட்டது. தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் பரிந்துரை மற்றும் பெறுகை குழுவின் அங்கீகாரத்தின் கீழ் இந்த பெறுகைகள் இடம்பெற்றது. இந்த ஒப்பந்தக்காரர் சென்ற வருடங்களில் மேற்கொண்ட செயற்திட்டங்களின் தகவல்கள் அனுப்பப்பட்டுள்ளன. ஒப்பந்தக்காரரினால் ஒரு சில வேலையின் அளவுகள் செய்து முடிக்கப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் அந்த நிர்மாணத்தின் கிரயத்தை | பெறுகைகள் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு செயற்திட்டம் முறையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இல்லாமல் ரூபா 800,000 முற்பணமொன்று செலுத்தப்பட்டிருந்தது. உரிய துறையில் போதுமான அளவு அனுபவமற்ற ஒப்பந்தக்காரர் பொருத்திய பதாதையில் குறைபாடுகள் காணப்படுவதாக பல சந்தர்ப்பங்களிலும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு அறிவித்திருந்தாலும் அவற்றை சரிசெய்து அதிகாரசபைக்கு கையளிக்காமல் இருந்ததுடன் வருமான மேம்பாட்டிற்காக அனுசரணை நிறுவனத்துடன் தொடர்பேற்படுத்தாததன் காரணமாக செயற்திட்டம் தோல்வியடைந்திருந்தது. | கருத்திற் கொண்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டதாகவும் மற்றும் இந்த கொடுப்பனவு முன்னால் தலைவரின் அறிவுறுத்தலுக்கும் மற்றும் அங்கீகாரத்தின் அடிப்படையில் இடம்பெற்றிருப்பதை தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். மேலும் ஒப்பந்தக்காரரினால் எதிர்வரும் 2 மாதத்திற்குள் அதிகாரசபைக்கு இந்த LED Digital பதாதையின் அனைத்து வேலைகளையும் நிறைவு செய்து கையளிப்பதற்காக எழுத்துமூலமாக அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | இரத்தினபுரி மாவட்டத்திலே 5 சுரங்க குழிகளை மூடுவதற்காக ஒப்பந்தக் காரர்களுடன் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டிருந்த போதிலும் 2 சுரங்க குழிகள் மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் ஒப்பந்தக்காரர்கள் ஒப்பந்தத்தின் பிரகாரம் பெறப்பட வேண்டிய ரூபா 3,601,935 ஆரம்ப காப்புறுதி பெறப்படாததன் காரணமாக அதற்கு உரித்தான நட்டத்தை அறவீடு செய்வதற்கு முடியாது போயுள்ளது. | 2 சுரங்க குழிகள் உரிய காலத்திற்குள் மூடப்பட்டுள்ளது. கனேகம, பாதகட, பில்லதெனிய சுரங்க குழி குளத்தின் அளவுக்கு விசாலமாக காணப்படுவதனால் அந்த குழிகளை மூடுவதற்கு கூடுதலான பணத்தை (50 இலட்சமளவு) செலவிடுவதற்கு நேரிடுமென்பதாலும் தெற்கு ஹுனுவல நாரகஸ்வத்த சுரங்க குழி பயிரிடும் கிணறாகவும் உள்ளதால் ஊர்மக்கள் அதை மூடுவதற்கு எதிராக நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் அந்த குழிகளை மூடுவதற்கு பணிப்பாளர்களினால் (காணி/அகழ்வு/சுற்றாடல்) நிறுத்தப்பட்டுள்ளது. மேலும் செயற்பாட்டு காப்புறுதி 2017 திசெம்பர் 31 ஆம் திகதிவரை செல்லுபடியாக உள்ளதுடன் அதிகாரசபையின் அறிவுறுத்தலுக்கு அமைய மீதமாகவுள்ள குழிகளை மூடாததன் காரணமாக செயற்பாட்டு காப்புறுதியை அரசுடைமையாக்குவதற்கு அல்லது வேறு சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியாதுள்ளது. | ஒப்பந்தத்தின் பிரகாரம் குழிகள் மூடப்பட்டு சுற்றாடல் பாதுகாப்புக்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**3.3 குறைபயன்பாட்டுடைய நிதியங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஆபரண அபிவிருத்தி நிதியத்தை பயன்படுத்தி சிறிய மற்றும் மத்திய அளவான வியாபாரிகளுக்கு ஆபரண உற்பத்தி கருவிகள் மற்றும் உபகரணங்கள் பகிர்ந்தளிக்கும் செயற்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. அதன் கீழ் ஒரு ஆபரண உற்பத்தி சங்கத்திற்கு மாத்திரம் ரூபா 4,115,184 உபகரணங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் நிதியத்தில் காணப்பட்ட ரூபா 76,067,905 மீதி உபயோகமின்றி வைக்கப்பட்டிருந்தது. | புபுது ஆபரண உற்பத்தியாளர்களின் நலன்புரி சங்கம் மாத்திரம் அவர்களின் யோசனைகள் மற்றும் அறிக்கைகளை அனுப்பியிருந்ததுடன் ஏனைய சங்கங்கள் எவ்வித அக்கறையும் காட்டவில்லை. 80 உற்பத்தி வடிவமைப்பாளர்கள் இந்த சங்கத்தின் உறுப்புரிமையை பெற்றிருப்பதுடன் 2016 ஆம் வருடத்திலே மத்திய மாகாண கைத்தொழில் அமைச்சின் மூலம் வெள்ளி ஆபரண உற்பத்தி கைத்தொழிலை நடாத்தி செய்வதற்கு பொது சேவைகள் மத்திய நிலையமொன்றை நிர்மாணித்து மூன்று கட்ட மின்சாரம் மற்றும் வேறு வசதிகளும் பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்ததுடன் கம்பளை பிரதேசத்திலேயே உற்பத்தியாளர்களுக்கு தொழில்நுட்ப அறிவை பெற்றுக்கொடுக்கும் நோக்கத்தில் இந்த செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதை அறியத்தருகின்றேன்.<br><br>இந்த நிதியத்தின் மூலம் இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனங்களுக்கு 2019 ம் வருடத்திற்குள் இரத்தினக்கல் மற்றும் ஆபரண வடிவமைப்பாளர்களை பயிற்றுவிப்பதற்காக ரூபா 780,597 வும் ஆபரண வடிவங்களை நிர்மானித்தல், இயந்திர மற்றும் சம்பிரதாய ஆபரண உற்பத்திகளுக்காக ஆபரண வடிவமைப்பாளர்களை பயிற்றுவிப்பதற்காக ஆலோசனை சேவைக்காக ரூபா 45,000 செலுத்தப்பட்டுள்ளது. | நிதியத்தை வினைத்திறனான பயன்பாட்டிற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் நிதியத்தால் பயன்படுத்தப்பட்ட ரூபா 4,213,289 ஆன பெறுமதியுள்ள உபகரணங்கள், சொத்துக்கள் என்பன ஆபரணச் சங்கமொன்றுக்கு நன்கொடையாக வழங்கப்பட்டதுடன் இவை பயன்படுத்தப்படாது வைக்கப்பட்டிருப்பதனால் உபகரணங்கள் கொடுக்கப்பட்டதற்கான நோக்கங்கள் அடையப்பட்டிருக்கவில்லை. மேலும் இந் நிதியத்தை பயன்படுத்தி நன்கொடைகளை வழங்குவதன் மூலம் கைத்தொழிலுக்கான பங்களிப்புக்கள் மிகவும் இழிவான நிலையே காணப்பட்டது. | ஆபரண உற்பத்தித் தேவையின் அடிப்படை உபகரணங்கள் மற்றும் வேறு வசதிகள் சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் மற்றும் ஆபரண கைத்தொழிலுக்கான தொழிற்நுட்ப உதவிகளை வழங்குவதற்கான ஏனைய தேவைப்பாடுகளுடன் இச் சங்கத்தின் உறுப்பினர்களும் இவ் வசதிகளைப் பயன்படுத்தி 2018 மே மாத்திலிருந்து ஆபரணங்கள் உற்பத்தியை தொடங்கியுள்ளனர். | சொத்துக்களை பின்தொடர்ந்து அவற்றை பயன்படுத்து வதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.4 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபரகணங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகாரசபையினால் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த நடமாடும் ஆய்வுகூடச் சேவையினூடாக ஆபரண தரத்தை பரீட்சிக்கும் நோக்கில் 2016 இல் கொள்வனவு செய்த ரூபா 7,794,888 பெறுமதியான 02 ஆய்வுகூட உபகரணங்கள் 03 வருடங்களுக்கு அதிக காலம் முறையான பாவனை இன்றி வைக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 183,548 ஆன இரத்தினக்கல் தொகையொன்று 05 வருடங்களுக்கு அதிக காலமாக பாவனையின்றி விளைவற்றுக் காணப்பட்டது. | கொழும்பு மற்றும் காலி தங்கத்தின் அளவை நிச்சயிக்கும் காரியத்தை முதன்மைப்படுத்தி சுற்றிவளைப்பு குழுக்களைப் பயன்படுத்தி ஆபரணங்களை பரீட்சிப்பதற்காக Hand Held Type EDXRF இயந்திரங்கள் 2 கொள்வனவு செய்யப்பட்டன. சுற்றிவளைப்பு பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்ற ஆபரண வியாபார நிலையங்களை பரீட்சிக்கும் போது இந்த இயந்திரம் எடுத்துச் செல்லப்பட்டு ஆபரணங்களின் தரம் பரீட்சிக்கப்படுகின்றது. மேலும் 2 இயந்திரங்களும் நடமாடும் ஆய்வுகூடத்தின் ஊடாக ஆபரணங்கள் பரீட்சிக்கும் நடவடிக்கைகளுக்கும் பிரதான அலுவலகத்தின் ஆய்வுகூடத்தின் ஆபரணங்கள் பரீட்சிப்பதற்கும், ஆபரண கண்காட்சி மற்றும் அறிவூட்டும் வேலைத்திட்டங்களுக்கும் நீதிமன்ற உத்தரவின் பேரில் ஆபரண துறையில் பரீட்சிப்பதற்கும் மற்றும் | சொத்துக்களை வினைத்திறனான பயன்பாட்டுக்கு தெவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பௌத்த கரும அமைச்சின் ஊடாக ஏற்பாடு செய்யப்படுகின்ற சமய ஸ்தலங்களில் ஆபரணங்களை மதிப்பீடு செய்தல் நடவடிக்கைகளிலும் தற்போது பாவனைக்கு உட்படுத்தப்படுகின்றது. அதனால் இந்த இயந்திரங்கள் இரண்டும் தற்போது பரீட்சிப்பதற்காக பாவனைக்கு உட்படுத்தப்படுகின்றன. | |
| (ஆ) | இரத்தினபுரிப் பிராந்திய அலுவலகத்தில் அமைக்கப்பட்டிருந்த நூதனசாலைக்கென 2016 ஆம் ஆண்டில் ரூபா 1,251,498 பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் 2 வருடங்களுக்கு மேலாக விளைவற்றதாகக் காணப்பட்டதுடன் மற்றும் கணக்காய்வு நடாத்தப்பட்ட திகதி வரையில் நூதனசாலை திறக்கப்பட்டிருக்கவில்லை. | தலைவர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரியின் அறிவுறுத்தல்களுக் கமைய கட்டிட நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் நூதனசாலையைத் திறப்பதில் தாமதம் ஏற்பட்டது. | - மேற்படி- |
| (இ) | அதிகார சபைக்குச் சொந்தமான மாத்தறை, பெலிதெனியவிலுள்ள ரூபா 889,000 பெறுமதியான 80 பேர்ச் காணி மற்றும் அதில் அமைந்துள்ள ரூபா 3,091,861 கழிக்கப்பட்ட பெறுமதியான 3,007 சதுரஅடியான கட்டிடம் என்பன 2012 ஆம் வருடத்திலிருந்து 7 வருடங்களுக்கும் அதிகமாக விளைவற்றதாகக் காணப்படுகின்றது. | இக் கட்டிடத்தைப் பயன்படுத்துவதற்கான தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | -மேற்படி- |

## 3.5 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகளிலுள்ள தாமதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கணனி மென்பொருளொன்றை ஸ்தாபிப்பதற்காக ரூபா 8,550,000 2018 ஆம் வருடத்திலே செலுத்தப்பட்டிருந்தாலும் மீளாய்வாண்டின் இறுதியிலும் அந்த விடயம் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. | கணனி மென்பொருளை ஸ்தாபிக்கும் போது நிறைவடைந்த 45% வேலைகளுக்காக ரூபா 8,550,000 விடுவிக்கப்பட்டுளது. கணனி பெகேஜை (பொதி) ஸ்தாபிப்பதற்கு உரிய உத்தியோகத்தர்களை பயிற்றுவித்தல், முகாமைத்துவத்திற்கு அறிவூட்டுதல், தேவையான | செயற்திட்ட திட்டமிடலின் பிரகாரம் செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வசதிகள் (VPN தொடர்பு) மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்தல் 2019 ஆம் வருடத்தில் இடம்பெற்றுள்ளது. 2020 ஆம் வருடத்திலே முழுமையாக நிறைவு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. | |
| (ஆ) | களுகங்கை ஹெரணியாவக்க எனுமிடத்தில் ரூபா 12.5 மில்லியனுக்கான இரத்தினக்கல் அகழ்தல் செயற்திட்டம் பொருட்டு 2017 ஆகஸ்ட் 11 ம் திகதி முயற்சியாளரொருவர் தெரிவு செய்யப்பட்டிருந்தபோதிலும் சுற்றாடலுக்கான பரிந்துரைகள் மற்றும் அகழ்வதற்கான ஏனைய அரச நிறுவனங்களின் அனுமதிகள் என்பன பெறப்படுவதற்குத் தவறியமையால் கணக்காய்வு செய்யப்பட்ட திகதி வரையில் இச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 1993 இன் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரசச் சட்டத்தின் பிரிவுகள் 14(ஊ)(எ) மற்றும் 14(ஓ) இன் பிரகாரம் அதிகாரச சபைக்கு அளிக்கப்பட்ட அடிப்படைப் பொறுப்புக்களைச் செயற்படுத்தும் செயற்திட்டமாகவும் இச் சட்டத்தில் உள்ள நிதிக்குறிக்கோள்களுக்கும் உடன்பட்டதாக திட்டமிடப்பட்டிருந்தது. இச் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்த முன்னர் தேவையான அங்கீகாரங்களைப் பெறுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | திட்டமிடப்பட்ட செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.6 பெறுகை முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிலே பெறுகைத் திட்டத்தின்படி ரூபா 518 மில்லியன் செலவிட்டு நிறைவேற்றப்பட வேண்டிய அதிகாரசபையின் பிரதான அலுவலக கட்டிடடம் உடைத்து அகற்றப்பட்டு, அந்த இடத்தில் 08 மாடிகளை கொண்ட புதிய அலுவலகமொன்றை நிர்மாணித்தல், இரத்தினபுரிய பிரதேசத்தில் காணியொன்றை கொள்வனவு செய்தல், | பிரதான அலுவலக கட்டிடம் தற்போதுள்ள இடத்தில் 8 மாடி கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கு அடிப்படை திட்டங்கள் தயாரிக்கப்பட்டாலும், தற்போதுள்ள இடத்தில் 08 மாடிகளுக்கு அதிகமான கட்டிடமொன்றிற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அங்கீகாரம் பெறப்படாததன் பொருட்டு 35 மாடிகளை கொண்ட கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கு காலி | பெறுகைகள் திட்டத்தின் பிரகாரம் உரிமை வேலைகள் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் கதிர்காமம் விடுமுறை பங்களா ஒன்றை நிர்மாணித்தல் ஆகிய வேலைகள் இடம்பெற்றிருக்கவில்லை. | முகப்பிரதேசத்தில் அமைந்துள்ள அரசிற்கு உரித்தான இடமொன்றை அதிகாரச சபைக்கு உரிமை மாற்றம் செய்வதற்கு தேவையான கெபினட் பத்திரத்தை 2019 ஜுலை 03 ஆம் திகதி அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br>அபத் 19/1960/104/061 மற்றும் 2019 யூலை 03 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் படி 2020 சனவரி 08 ஆந் திகதி கைத்தொழில் மற்றும் விநியோக முகாமைத்தவ அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது வழங்கப்பட்ட அறிவுறுத்தலுக்கமைவாக சமர்ப்பிக்கப்பட்ட மறுசீரமைப்பு கெபினட் பத்திரத்திற்கான அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்படவில்லை. | |
| (ஆ) | இரத்தினபுரி தெமுவாவக இரத்தினக்கல் வீதி சர்வதேச இரத்தினக்கல் மத்திய நிலையமாக அபிவிருத்தி செய்தல் மற்றும் இரத்தினக்கல் கோபுரமொன்றை நிர்மானித்தலுக்காக 2018 ஜீலை 03 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருப்பதுடன் 2018 மற்றும் 2019 வருடங்களில் முறையே ரூபா 100 மில்லியன் மற்றும் ரூபா 150 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததாலும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்க வில்லை. | 2018 ஜுலை 03 ஆம் திகதி அமைச்சரவை தீர்மானத்தின் படி செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்வைக்கப்பட்ட காணியை கொடுப்பனவற்ற பத்திரமொன்றின் மூலமாக அதிகாரசபைக்கு உரிமைமாற்றம் செய்வதற்கு இரத்தினபுரி பிரதேச சபை செயலாளர் இணக்கப்பாட்டை தெரிவித்துள்ளதுடன் ஏனைய நடவடிக்கைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கினறன.<br><br>செயற்திட்டத்திற்காக முன்வைக்கப்பட்ட காணியின் நில அளவை நடவடிக்கைகள் மற்றும் நிலத்தடி மண்ணின் நிலைமையை பரீட்சித்தலும் இடம்பெற்றுள்ளன. நகர அபிவிருத்தி அதிகாரச சபையினதும் மற்றும் இணக்கப்பாட்டை பெற்றுக்கொள்ள வேண்டிய | பெறுகைகள் திட்டத்தின் பிரகாரம் உரிமை வேலைகள் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | அரச நிறுவனங்களின் அடிப்படை அங்கீகாரங்கள் பெறப்பட்டுள்ளன. செயற்திட்டத்திற்கு உரிய இறுதி திட்டங்கள் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு 2020 மார்ச் மாதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. செயற்திட்டத்தின் பெறுகை நடவடிக்கைகளுக்காக BOQ மற்றும் Tender Document ஆலோசனை நிறுவன அதிகாரசபைக்கு பெற்றுக்கொடுப்பதற்கு ஏற்பாடாகியுள்ளது. | |

## 3.7 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் பதவிக்காக 5 வருடத்திற்குள் 6 உத்தியோகத்தர்கள் வேலை பார்ப்பதற்கு நியமிக்கப்பட்டதுடன் பதவியை நிரந்தரமாக நிரப்புவதற்கு இருந்த சட்ட இடையூறுகள் 2017 திசெம்பர் 13 ஆம் திகதியிலிருந்து நீக்கப்பட்டிருந்தாலும் பதவியை நிரப்புவதற்கு செயற்பட்டிருக்கவில்லை. 2011 ஆம் வருடத்திலிருந்து வெற்றிடமாக காணப்படுகின்ற உதவி பணிப்பாளர் நாயகம் பதவியை நிரப்புவதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | 1993 ஆம் வருட 50 ஆம் இலக்க அதிகார சபைச் சட்டத்தின் 23 ஆம் பிரிவின் கீழ் 2017 ஆம் வருடத்திலிருந்து அடிக்கடி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் நியமிக்கப்பட்டது விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் எழுத்துமூல பணிப்பின் கீழ் ஆகும். பணிப்பினை மீறிச் செல்ல முடியாததன் காரணமாக அப் படியான நிலைமையொன்று உருவாகியுள்ளது. | உயர் முகாமைத்துவ பதவியை உடனடியாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2009 ஆம் வருடத்தின் அமைய எழுதுவினைஞர் பதவிக்கு உள்வாங்கிக் கொண்டு 2011 ஆம் வருடத்தில் முகாமைத்துவ உதவியாளர் ஒப்பந்த பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ள பெண் ஊழியர் 2013 ஏப்ரல் 05 ஆம் திகதியிலிருந்து அபிவிருத்தி உதவியாளர் நிரந்தர பதவிக்கு நியமிக்கப்பட்டிருந்தது. உரிய பெண் ஊழியரை ஆட்சேர்ப்பு முறைக்கு அமைய உரிய 3 பதவிகளுக்கு தேவையான அடிப்படை தகைமைகள் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் அபிவிருத்தி உதவியாளர் நிரந்தர பதவிக்கு | 2009 ஏப்ரல் மாதம் ஆகும் போது பழைய ஆட்சேர்ப்பு முறைமையின் கிழ் பெண் ஊழியர் தமைமைகளை பூர்த்தியாக்கியிருந்ததன் காரணமாக அமைய எழுதுவினைஞர்/ / முகாமைத்துவ உதவியாளர் (ஒப்பந்த) பதவி வழங்கப்பட்டது. பின்னர் சீர் திருத்தம் செய்யப்பட்ட ஆட்சேர்ப்பு முறைமைக்கு அமைய முகாமைத்துவ உதவியாளர் பதவிக்காக தேவையான தகைமை | |

| | | | |
|---|---|---|---|
| | போதுமான அளவு வேலையொன்றை ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பூர்த்தியாக்கப்படாததன் காரணமாக அந்த பதவி நிரந்தரமாக்ககப்படவில்லை. அப்போதிலிருந்த சிரேஷ்ட முகாமையாளரின் (மனித கட்டுப்பாடு) பரிந்துரை மற்றும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் மற்றும் பிரதேச அபிவிருத்தி உதவியாளர் (MA5-1) பதவிக்காக நியமிக்கப்பட்டுள்ளது. தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பணிப்பாளர் சபைக்கு முன்வைக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | இரத்தினக்கல் கைத்தொழிலுக்கு தொடர்புபட்டு இடம்பெறுகின்ற நீதியற்ற மற்றும் அனுமதியற்ற நடவடிக்கைகளை முறியடிப்பதற்கு அதிகாரசபையினால் மேற்கொள்ளப்படுகின்ற சுற்றிவளைப்புக்காக தகைமையான பணியாட்கள் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | இரத்தினக்கல் கைத்தொழில் அனுமதியற்ற நடவடிக்கைகள் சம்பந்தமாக நீதியை நடைமுறைப்படுத்துவதற்காக பணிப்பாளர் ஒருவரின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுவதோடு மற்றும் பிரதேச அபிவிருத்திப் பிரிவொன்று நடைமுறைப்படுத்தப்படுகிறது. | சுற்றிவளைப்பிற்காக பிரத்தியேக பணியாட்கள் நியமிக்கப்படுவதற்கு தேவையாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2019 ஜுன் 22 ஆம் திகதியிலிருந்து வெற்றிடமாகவுள்ள பணிப்பாளர் (தங்கத்தின் அளவை நிச்சயித்தல் மற்றும் முத்திரையிடல்) பதவிக்காக உத்தியோகத்தரொருவரை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் ஒப்பந்த அடிப்படையில் 06 மாத காலத்திற்கு ஆலோசகரொருவரை ஆட்சேர்க்கப்பட்டிருந்ததுடன் அங்கீகாரமின்றி எரிபொருள் கொடுப்பனவாக மீளாய்வாண்டிலே ரூபா 83,334 செலுத்தப்பட்டிருந்தது. | 2019 ஜுன் 22 ஆம் திகதியிலிருந்து பணிப்பாளர் (தங்களத்தின் அளவை நிச்சயித்தல்) பதவி மற்றும் 2019 நவம்பர் 10 ஆம் திகதியிலிருந்து பணிப்பாளர் (மதிப்பீடு / இரத்தினக்கல் விஞ்ஞானி) பதவி வெற்றிடமாக இருந்தபோதிலும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ள அந்த ஆட்சேர்ப்பு முறைமைக்கான அங்கீகாரம் இதுவரை கிடைக்கப்பெறாததன் காரணமாக ஆட்சேர்ப்பு கால தாமதமாக காணப்படுகின்றது. அதனால் அந்தப் பிரிவின் குறிக்கோளின் காரியங்களை தொடர்ந்து மற்றும் மிருதுவான தன்மையோடு நடாத்திச் செல்வதற்கு வல்லமையும் அனுபவமுள்ள உத்தியோகத்தரொருவர் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் ஒப்பந்த | நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | அடிப்படையில் நியமித்து உரிய எரிபொருள் கொடுப்பனவு வழங்கப்பட்டது. ஒப்பந்த அடிப்படையின் கீழ் அல்லது உத்தியோகத்தர் ஆட்சேர்ப்புப்பிரிவு இரண்டின் வேலைகளின் முரண்பாடுகளை குறைத்து நடாத்திச் செல்வதற்கு முடியுமாகியுள்ளது. | |

**3.8 வாகன கட்டமைப்பு முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அதிகாரசபைக்குள் 10 வருடங்களை விட அதிக காலம் பாவனைக்குட்படுத்திய ரூபா 9,378,888 கியத்திலான 05 வாகனங்கள் மற்றும் பெறுமதி குறிப்பிடப்படாத இன்னுமொரு வாகனம் பதிவழிப்பதற்கு 2019 பெப்ரவரி 21 ஆம் திகதி பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கியிருந்தும் அந்த வாகனங்கள் பதிவழிக்கப்பட்டிருக்கவில்லை. 2012 ஆம் வருடத்திலே ரூபா 8,950,000 வுக்கு கொள்வனவு செய்யப்பட்ட வாகனமொன்றிற்காக 7 வருடங்த்திற்குள் ரூபா 4,542,832 திருத்த வேலைகள் மற்றும் பராமரிப்புச் செலவாக மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் வாகனத்தை பாவனைக்குட்படுத்தவோ அல்லது பதிவழிக்கவோ நடவடிக்கை எடுக்காமல் 2 வருடங்களுக்கு அதிக காலத்திற்கு முன்பே விளைவற்று காணப்பட்டது. மேலும் இடருக்கு உட்பட்ட வாகனமொன்று திருத்தங்களை மேற்கொண்டு ஓட்டத்திற்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்காமல் 09 மாதங்களுக்கு அதிக காலமாக விளைவற்று காணப்பட்டது. | பதிவழிப்பதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டதன் பொருட்டு பதிவழிக்கப்பட்ட வாகனங்கள் அடையாளம் காண்பதற்கான விசேட கணக்கெடுப்பு சபை மற்றும் மதிப்பீட்டு சபை நியமிக்கப்பட்டு அந்த அறிக்கையுடனான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்காக 2019 ஒக்டோபர் 25 ஆம் திகதி மகாவலி மற்றும் சுற்றாடல் அமைச்சிற்கு முன்வைக்கப்பட்டுள்ளது. இருந்தாலும் உரிய அங்கீகாரம் காலதாமதம் அடைவதாலும் அரசினால் அரச நிறுவனங்களுக்கான புதிய வாகனங்களை கொள்வனவு செய்யப்படாமலிப்பதற்கான மேற்கொள்ளப்பட்ட கொள்கை தீர்மானத்தின் காரணமாக இந்த வாகனங்கள் பதிவழிக்கப்படாமல் திருத்தங்களை மேற்கொண்டு பாவனைக்குட்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது. | வாகனங்களை பதிவழிப்பதற்கு அல்லது பயன்பாட்டிற்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அதிகாரசபையின் பிரதான நோக்கங்கள் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாமையுடன் தங்க இறக்குமதியாளர்களுக்கான வசதிகளை வழங்குதல், இலங்கையின் இரத்தினக்கல் மற்றும் ஆபரணப் பரிமாற்றத்தை எளிதாக்கலும் மேம்படுத்தலும் ரட்ணதீப வியாபார நிலையங்களை தொழிற்படுத்தல் நிர்வகித்தலும் போன்ற நோக்கங்கள் மீளாய்வாண்டிலே செயல்நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்குவதற்கு மற்றும் அதன் நோக்கத்தை நிறைவேற்றுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அதிகாரசபை சட்டத்தின் தங்க நபர்களுக்காக வசதிகளை வழங்குதல் தொடர்பாக நிதி ஏற்பாடு இல்லாதிருந்ததுடன் தங்க ஆபரணம் கைத்தொழிலை மேற்கொள்கின்றவர்களின் விண்ணப்பதாரிகளை அதிகாரசபையில் பதிவு செய்யப்படும். 2018 ஆம் ஆண்டு வருடத்திலே ஏப்ரல் மாதத்திலிருந்து தங்க இறக்குமதியின் போது அறவிடப்படுகின்ற 15% சுங்க வரிக்கட்டணத்திற்காக உதவி வழங்குவதற்கு அதிகாரசபை தலையிட்டு கெபினட் பத்திரமொன்று கூட தயாரித்து அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br><br>இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரண பரிமாற்றத்திற்காக வசதிகளை வழங்குதல் மற்றும் முன்னேற்றுதல் என்பன செயல் நடவடிக்கைத் திடடத்தில் 9.2 இலக்கத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் உரிய மத்திய நிலையத்தை முன்னேற்றுவதற்காக இலங்கை விமானக் கம்பனி மற்றும் இலங்கை சுற்றுலாச் சபையின் சஞ்சிகைகளில் விளம்பரம் செய்தல், வெளிநாட்டு நடவடிக்கை அமைச்சு மற்றும் உலக வியாபார மத்திய நிலையத்தில் அமைந்துள்ள நிறுவனங்களை அறிவூட்டல் மேற்கொள்ளப்பட்டது. மத்திய நிலையத்தில் அமைந்துள்ள கடை உரிமையாளர்களுக்கான அனைத்து வசதிகளையும் வழங்குதல் அதிகார சபையினூடாக மேற்கொள்ளப்படும். | முக்கிய நோக்கங்களை நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்குவதற்கும் அந் நோக்கங்களை அடைவதற்குமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி மீளாய்வாண்டிற்குள் நிறைவேற்றப்பட வேண்டியுள்ள புதிய இரத்தினக்கல் வைப்புக்களை அடையாளங்காண்பதற்குரிய ஆலோசனை சேவையை வழங்குதல், ஆய்வு மற்றும் அபிவிருத்தி செயல் நடவடிக்கைகள், இரத்தினக்கல் கைத்தொழிலை மேம்படுத்தல் மற்றும் இரத்திக்கல் ஏற்றுமதியை முன்னேற்றுவதற்காக தேசிய மற்றும் சர்வதேச கண்காட்சிகளை நடாத்துதல் உயர்தரத்திலான இரத்தினக்கல் மற்றும் ஆபரண உற்பத்திக்காக பெறுமதியை சேர்ப்பதற்குரிய பயிற்சி பாட நெறிகளை நடாத்துதல் சர்வதேச தரத்தினாலான இரத்தினக்கல் பரீட்சித்தல் மற்றும் த்ங்கத்தின் அளவை நிச்சயிற்ககும் புதிய 03 ஆய்வுகூடங்களை ஆரம்பித்தல், அதிகாரச சபையினால் வழங்கப்படுகின்ற சேவைகளை தரத்திற்குள்ளாக்குதல், 02 புதிய கிளைகளை நிர்மாணித்தல் கருத்தரங்கு கட்டிடமொன்று உள்ளடங்களாக சுற்றுலா பங்களாவொன்றை நிர்மாணித்தல் ஆகிய வேலைகளுக்காக ரூபா 397,450,000 நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தும் அந்த வேலைகள் வருடத்திற்குள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இரத்தினக்கல் பரீட்சித்தல் ஆய்வுகூடமொன்றும் மற்றும் தங்கத்தின் அளவை நிச்சயிக்கும் ஆய்வுகூடமொன்றும் கண்டியில் அமைத்தல் காலத்திற்கு பொருத்தமற்றதாக கலந்தாலோசித்து தீர்மானிக்கப்பட்டு அதற்கு தீர்வாக பிரதான அலுவலகத்திலுள்ள ஆய்வுகூட தரத்தை உயர்த்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது. இரத்தினக்கல் பரீட்சித்தல் ஆய்வுகூடத்திற்கு ISO 17025:2017 தரச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளும் செயல் நடவடிக்கைகள் இடம்பெற்றுக்கொண்டிருப்பதுடன் அடிப்படை வேலைப்பகுதிகள் தற்போதே முடிவடைந்துள்ளது. கொழும்பு பிரதான காரியாலயத்தின் ஆய்வுகூடத்தை மேம்படுத்துவதற்கு விலை மனுக்கோரல், வழங்கல் பிரிவின் மூலம் இடம்பெற்றது. பிரதான அலுவலகத்தில் அமைந்துள்ள இரத்தினக்கல் பரீசிக்கும் ஆய்வுகூடத்தை தரம் உயர்த்துதல் தற்போதும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. அதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளது. | செயல் நடவடிக்கைத்திட்டம் நடைமுறைசாத்தியமாக இருக்க வேண்டியதுடன் அதன் குறிக்கோள்களை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 11 இரத்தினக்கல் காணிகளை ஏலவிற்பனை செய்ததன் காரணமாக ரூபா 17,640,000 வருமானமொன்றை பெற்றுக்கொள்ள திட்டமிட்டிருந்தாலும் ஒரு காணி மாத்திரம் ஏல வற்பனை செய்யப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 9,470,000 வருமானம் பெறப்பட்டிருந்தது. நடமாடும் சேவையின் ஊடாக இரத்திக்கல் அகழ்வு அனுமதிப்பத்திரம் விநியோகித்தல் மற்றும் ஏற்றுமதி அனுமதிப்பத்திரம் | விசேட இரத்தினக்கல் அகழ்வு செயற்திட்டம் நிறுத்தப்பட்டதன் பின்னர் தோட்டக் கம்பனிகள் மூலம் காணி ஏலவிற்பனைக்காக காணியை விடுவித்தல் மறுக்கப்பட்டிருந்தது. விடுவிக்கக்கூடிய காணிகளின் எண்ணிக்கை குறைந்ததனால் வருமானமும் குறைந்துள்ளது. | உள்ளபடியாக |

| | | | |
|---|---|---|---|
| | பெற்றுக்கொடுத்தல் மூலமாக ரூபா 12,000,000 வருமானமொன்று பெற்றுக்கொள்ளும் இலக்காக இருந்தாலும் அந்த அனுமதிப்பத்திரம் விநியோகித்து அல்லது வருமானம் பெற்றுக்கொண்டோ இல்லாதிருந்ததுடன் கெவுடா கட்ட ஏற்றுமதியில் அடைந்து கொண்ட வருமானம் இலக்காக இருந்த ரூபா 19,653,000 வருமானத்தில் நூற்றுக்கு 53 மாத்திரமேயாகும். | | |
| (ஈ) | தேசிய மற்றும் சர்வதேச அளவில் இரத்தினக்கல் கைத்தொழிலை மேம்படுத்தும் நோக்கில் 11 சர்வதேச சந்தைகளையும் மற்றும் 10 தேசிய சந்தைகளையும் நடாத்துவதற்கு ரூபா 66 மில்லியன ஒதுக்கப்பட்டிருந்தாலும் ரூபா 9.4 மில்லியன் செலவிட்டு தேசிய மற்றும் சர்வதேச சந்தைகள் 12 மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தது. | சர்வதேச வியாபாரக் கண்காட்சிக்காக போதுமான அளவு விண்ணப்பதாரிகள் இல்லாதிருந்தல் ஏற்றுமதியாளர்கள் நேரடியாக வியாபாரக் கூடங்களை ஒதுக்கிக்கொள்ளல் மற்றும் கண்காட்சிக்காக பங்குபற்றலுக்கு ஏற்றுமதியாளர்கள் விரும்பம் தெரிவிக்காததனால் திட்டமிடப்பட்ட சர்வதேச கண்காட்சிகளை நடைமுறைப்படுத்த முடியாதுள்ளது.<br><br>உலக வியாபார மத்திய நிலையத்தில் இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரண பரிமாற்ற மத்திய நிலையத்தை பிரச்சாரம் செய்வதற்கும், கப்பல் மூலமாக வருகை தரம் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை இலங்கை இரத்திக்கல் மற்றும் ஆபரணத்தின் மீது விருப்பத்தை ஏற்படுத்தும் நோக்கில் திட்டமிடப்பட்ட வியாபார கண்காட்சிகளை உரிய நிறுவனங்களின் ஒத்துழைப்பை பெற முடியாததன் காரணமாக தோல்வியடைந்தது. இடம்பெற்ற உறுதியற்ற அரசியல், பின்புலம் அடிக்கடி மாற்றத்திற்குள்ளாகும் அதிகாரசபையின் தலைவர் பதவி காரணமாக திட்டமிடப்பட்ட கண்காட்சிகளை ஏற்பாடு செய்ய முடியாது போனது. 2019 ஆம் வருட ஏப்ரலில் இடம்பெற்ற உயிர்த்த | உள்ளபடியாக |

| | | |
|---|---|---|
| | ஞாயிறு தாக்குதலுடன் சந்தைப்படுத்தலை மேம்படுத்தும் நோக்காக கொண்ட வேலைத்திட்டங்கள் ஏற்பாடு செய்யப்படவில்லை. | |
| (உ) சமூக பாதுகாப்பு நடவடிக்கையின் கீழ் சுரங்க அகழ்வின் காரணமாக பாதிப்புக்குள்கான 4 பிரதேசங்களையும் சாதாரண நிலைக்கு மாற்றமடையச் செய்வதற்கு ரூபா 15 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 281,656 செலவிட்டு ஒரு ஸ்தானத்தை மாத்திரம் புனரமைப்பு செய்யப்பட்டிருந்தது. | விடையளிக்கப்படவில்லை. | உள்ளபடியாக |

## 4.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி தொடர்பிலான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு ''நிகழ்ச்சி நிரல்'' பிரகாரம் ஒவ்வொரு அரச நிறுவனமும் செயலாற்ற வேண்டிய போதிலும் மற்றும் அதிகார சபை தமது விடயப்பரப்பிற்கு ஏற்புடைய நடவடிக்கைகள் தொடர்பில் அறிந்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது குறித்த எவ்வித நடவடிக்கைகளும் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி தொடர்பிலான ஐக்கிய நாடுகளின் ''நிகழ்ச்சி நிரல்'' பிரகாரம் நடவடிக்கைகள் துரிதமாக எடுக்கப்படும் என அறிவிக்க விருப்புகிறேன். | ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |